கொடுத்த புகாருக்கு ரகசிய முறையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண், 174, டாக்டர் (திருமதி) பியாட்ரிச்ஸ் டி. சோசா. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

174 நடைபாதை வாசிகளுக்கு வீட்டுவசதி

*4351—டாக்டர் (திருமதி) பியாட்ரிக்ஸ் டி. சோசா. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நடைபாதை வாசிகளுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அரசிடம் நடைபாதை வாசிகள் எண்ணிக்கை குறித்து புள்ளி விவரம் உள்ளதா?

மாண்புமிகு திரு டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். சென்னை மாநகரில் வசிக்கும் நடைபாதை வாசிகளுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் உள்ளது,

(ஆ) நடைபாதைவாசிகள் எண்ணிக்கை குறித்து புள்ளி விவரத்தினை சென்னைப் பெருநகரவளர்ச்சிக் குழுமம் தனியார் நிறுவனங்கள் மூலமாக சேகரித்து வருகிறது,

Dr. (Thirumathi) BEATRIX D'SOUZA: Hon. Speaker, Sir, under the 'Pavements dwellers, we should include all those who live without shelter on river embankments, near canals and under bridges, which includes street children. They live in sub-human conditions and their life style is one of total depravation. will the Government register these families as a first step towards relocating them in proper houses?

The Hon. Thiru T. M. SELVAGANAPATHY: Hon. Speaker, Sir the Government will examine the issue raised by the Hon, Member.

[1992 மார்ச் 11

Dr. Thirumathi BEATRIX D'SOUZA: Hon Speaker, Sir, I thank the Hon. Minister.

Hon. SPEAKER: Hon. Chief Minister.

The HON. Dr. J. JAYALALITHA; Hon. Speaker, Sir, as regards registration of those families on the pavements without proper dwellings, that is a question, that should be addressed to the Social Welfare department.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 175. டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

175---

சத்துணவுத் திட்டம் குறித்து வளர்ச்சி மதிப்பீட்டு அட்டவணை.

*4398 டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு சமூக நலந்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுத் திட்டம் திறம்பட செயல்படுகிறதா என்பதை அறிய சத்துணவுத் திட்டத்தின் அளவுகோலாக வளர்ச்சி மதிப்பீட்டு அட்டவணை (Growth assessment chart) தயாரிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் குழந்தைகளுக்கு எடை எடுக்கப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு உடலை, உயிரை அறிவை வளர்த்துஅதன்மூலம் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க அமைக்கப்பட்ட இந்தத் திட்டமானது, இன்றைய அரசால், நம்முடைய அரசால், சுகாதாரப் பணிகளுடன் இணைக்கப்பட்டமைக்கு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சத்துணவுத்திட்டமானது குழந்தைகளின் உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி மற்றும் அறிவுத் திறன் ஆகியவற்றை ஒன்று சேர எடுக்கும் கருவியாகுமே அல்லாமல், எடையை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு குழந்தையின் வளர்ச்சியை நாம் கண்டு விட முடியாது. ஆகவே இனி வரும் நாட்களில் இந்தத் திட்டம் திறம்பட செயல்பட, ''வெல்பேபி கிளினிக்கல்இல் உள்ள சார்ட் படி, குறிப்பாக தலை பாகத்தின் சுற்றளவு, மேல் கையின் சதைப் பிடிப்பு, வயிற்றின் சுற்றளவு, குழந்தையின் உயரம் ஆகிய பேராமீட்டர்கள் கொண்டு குழந்தையின் வளர்ச்சியை நாம் அறிகிறோம். இவை அனைத்திற்கும் மேலாக I. Q. Assessment. It is veryy Importent. ஆதலால்.....